II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE

LAOP.**No. 277 of 2004**

Deposition of witness for the Reffering Officer /RW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 28.01.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | R.Senthamarai Selvi | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

<u>முதல் விசாரணை–</u>

நான் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் நில எடுப்பு பிரிவு யூனிட் 4ன் தனி வட்டாச்சியர் ஆவேன். மேற்கண்ட வழக்கானது குத்தம்பாக்கம் கிராமம், பூந்தமல்லி வட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் புல எண்.737/1ல் 0.07.0 ஏர்ஸ் நிலம் மற்றும் புல எண். 654/2ல் 0.50.0 ஏர்ஸ் நிலம் மற்றும் புல எண்.654/3ல் 0.10.5 ஆகியவற்றை கையகப்படுத்தியதற்காக அவார்டு எண்.1/2003, நாள் 10.02.2003ன் படி புல எண்.737/1ல் 0.07.0 ஏர்ஸ் நிலத்திற்கு மொத்தம் ரூ.21,624/– ம், புல எண்.654/2ல் 0.50.0 ஏர்ஸ் நிலம் மற்றும் புல எண். 654/3ல் 0.10.0 ஏர்ஸ் நிலத்திற்கு சேர்த்து மொத்தமாக ரூ.1,86,897/– ம் இழப்பீடாக வழங்கப்பட்டது. அதன் பின் கோருனர்களுக்கு இடையேயான உரிமை பிரச்சனையை தீர்வு காணும் பொருட்டு நில கையகப்படுத்தும் சட்ட பிரிவு 30, 31(2)ன் படி இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. இழப்பீட்டு தொகையும் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது.

கோருனர் தரப்பில் குறுக்கு விசாரணை–

கோருனர்களுக்கு இடையே உரிமை மூல பிரச்சனை இருந்ததால்

நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. விசாரணை சமயத்தில் உரிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. நிலம் கையகப்படுத்தும் போது உரிமையாளருக்கு அறிவிப்பு அனுப்புவோம் என்றால் பட்டா யார் பெயரில் உள்ளதோ அவர்களுக்கு அறிவிப்பு அனுப்புவோம்.

(இந்த நிலையில் கோருனர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்தற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)